# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**(Under Section 173 BNSS)** ~~(Under Section 154 Cr.P.C.)~~ ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ C 8120384

1. District : மாவட்டம் Vellore | PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 2/2025 | Date: நாள் 7.4.2025

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: U/s 7 of PC (Amendment) Act, 2018
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் Last week of March 2025 | Date to : நாள் வரை 01.04.2025 & 02.04.2025
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.04.2025 | Time : நேரம் 09.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Volume-I 2025 | Time : நேரம் 07.04.2025 @ 10.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் - O/o the Block Development officer, Gudiyatham, vellore - 30 kms Northwest
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Lingeshwaran | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Mahadevan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/2025 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Supervisor | (g) Address : முகவரி No. 31, Raja street, Karuneegasamuthiram village, Volathur post, Gudiyatham Taluk, vellore District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Nirmalkumar, Assistant Engineer, BDO office, Gudiyatham, vellore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............—...............on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........—........ பதவி ........—........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........—........ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 07/04/25

[signature] 7.4.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.04.2025 @ 10.45 Hrs.

Name: பெயர் ......G. Mythily......
Rank: நிலை ......................No. எண் ..........
Inspector of Police, VGAC, Vellore.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 07.04.2025-ஆம் தேதி 09.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.M.லிங்கேஷ்வரன், வயது.28/2025 த/பெ மகாதேவன், எண்.31, ராஜா தெரு, கருணீக சமுத்திரம் கிராமம், வளத்தூர் அஞ்சல், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு வேலூர், 07.04.2025 அனுப்புநர், M. லிங்கேஷ்வரன், வயது.28/2025 த/பெ மகாதேவன், எண்.31, ராஜா தெரு, கருணீக சமுத்திரம் கிராமம், வளத்தூர் அஞ்சல், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர் மாவட்டம். அய்யா, நான் வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, கருணீக சமுத்திரம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் பி.டெக் படித்துள்ளேன். நான் படித்து முடித்தவுடன் குடியாத்தம் பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். அந்த சமயத்தில் குடியாத்தம் மேல்ஆலத்தூரை சேர்ந்த திரு.பிரதீஸ் என்பவரும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். திரு.பிரதீஸ் அவர்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் குடியாத்தத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரராக இருந்து வருகிறார். குடியாத்தம் BDO அலுவலகத்தில் ஒப்பந்த பணிகளை எடுத்து செய்து வருகிறார். நான் அவரிடம் கடந்த 2021 ஆம் ஆண்டு முதலே Supervisor- ஆக வேலை செய்து வருகிறேன். நான் வேலைகளுக்கான பொருட்களை கொள்முதல் செய்வது, வேலையாட்களை வரவழைத்து வேலை வாங்குவது, அவர்களுக்கான சம்பளம் தருவது ஆகிய வேலைகளை பார்த்து வருகிறேன். ஒப்பந்ததாரர் திரு.பிரதீஸ் அவர்கள் BDO அலுவலகத்திற்கு செல்லும் போது நானும் அவருடன் சென்று, அதிகாரிகளை பார்த்து நாங்கள் செய்யும் வேலைகளுக்கு உண்டான கொள்முதல் பொருட்களுக்கான பில்களை கொடுப்பது வழக்கம். கடந்த 2024 ஆம் ஆண்டு ஆன்லைன் டெண்டர் மூலமாக குடியாத்தம் சுற்றுவட்டார பகுதிகளில் 4 ஒப்பந்த பணிகளை எடுத்து செய்தோம். அவை கூத்தம்பாக்கம் கிராமத்தில் ரூ.10,00,000/- க்கு சிமெண்ட் கான்கிரிட் ரோடு அமைத்தல், செருவங்கி கிராமத்தில் ரூ.6,00,000/- க்கு பேவர் பிளாக் ரோடு அமைத்தல், மேல்முட்டுகூர் கிராமத்தில் ரூ.32,80,000/- க்கு பள்ளி வகுப்பறை கட்டிடம் மற்றும் குடியாத்தம் தங்கம் நகரில் ரூ.6,00,000/- க்கு கழிவுநீர் கால்வாய் அமைத்தல் ஆகிய பணிகள் ஆகும். மேற்படி பணிகளை செய்யும் போது

குடியாத்தம் BDO அலுவலகத்தில் பணிபுரியும் AE திரு.நிர்மல்குமார் அவர்கள் பணிகளை பார்வையிட்டு M-Book எழுதுவார். மேற்படி 4 ஒப்பந்த பணிகளையும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் செய்து முடித்தோம். மேற்படி முடித்த பணிகளின் பில்களை குடியாத்தம் BDO அலுவலகத்தில் கொடுத்தேன். அதன்பிறகு மேற்கண்ட 4 ஒப்பந்த பணிகளில் ஒரு பணிக்கு உண்டான தொகை ஜனவரி மாதமும், 2 பணிகளுக்கு உண்டான தொகை கடந்த மார்ச் மாதமும் வரப்பெற்றது. ஒரு ஒப்பந்த பணிக்கு பணம் வராமல் இருந்தது. அது சம்மந்தமாக ஒப்பந்ததாரர் திரு.பிரதீஸ் அவர்கள் என்னை BDO அலுவலகத்திற்கு சென்று விசாரித்து வருமாறு கூறினார். அதன்பேரில் நான் கடந்த மார்ச் கடைசி வாரத்தில் குடியாத்தம் BDO அலுவலகத்திற்கு சென்று AE திரு.நிர்மல்குமார் என்பவரை சந்தித்து ஒரு ஒப்பந்த பணிக்கு உண்டான பில் மட்டும் வராமல் உள்ளது என்று கேட்டதற்கு, திரு.நிர்மல்குமார் அவர்கள் M-Book நான் முடித்து அனுப்பி விட்டேன். அதற்குண்டான பணம் ஒரிரு நாட்களில் உங்களுக்கு வந்துவிடும் என்று கூறி, 4 ஒப்பந்த பணிகளுக்கு எனக்கு தனியாக 2% கொடுக்க வேண்டும் கூறினார். நான் ஒப்பந்ததாரர் திரு.பிரதீஸ் அவர்களிடம் கேட்டு சொல்கிறேன் என்று கூறினேன். அதற்கு திரு.நிர்மல்குமார் அவர்கள் எனக்கு பணம் கொடுத்தால் தான் தற்போது நீங்கள் செய்யும் ஒப்பந்த பணிகளுக்கும், இனிவரும் காலங்களில் நீங்கள் செய்யும் ஒப்பந்த பணிகளுக்கும் M-Book எழுதி தருவேன் என்று கூறினார். நான் மேற்படி தகவலை திரு.பிரதீஸ் அவர்களிடம் கூறியதற்கு, நாம் ஏன் லஞ்சமாக நிர்மல்குமார் அவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் அதுவும் அவ்வளவு பணம் முடியாது நீ நேரில் சென்று அவரிடம் பேசு என்று கூறினார். அதன்பிறகு கடந்த 01.04.2025 அன்று மதியம் சுமார் 1.00 மணிக்கு நான் குடியாத்தம் BDO அலுவலகம் சென்று AE திரு.நிர்மல்குமார் அவர்களை சந்தித்து ஒப்பந்ததாரர் திரு.பிரதீஸ் அவர்கள் கூறியவாறு, சார் அவ்வளவு தரமுடியாது என்று கூறினேன். அதற்கு AE திரு.நிர்மல்குமார் அவர்கள் எனக்கு தனியாக ரூ.75,000/- கொடுத்தால் தான் தற்போது நீங்கள் செய்யும் ஒப்பந்த பணிகளுக்கு M-Book எழுதி தருவேன் என்று கண்டிப்பாக தெரிவித்துவிட்டார். நான் அதற்கும் அவ்வளவு பணம் தரமுடியாது என்று கூறியதற்கு அவர் ரூ.30,000/- எனக்கு முதலில் கொடுங்கள், மீதம் பிறகு பார்த்து கொள்ளலாம் என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

அதன்பிறகு கடந்த 02.04.2025 அன்று இரவு சுமார் 08.30 மணிக்கு AE திரு.நிர்மல்குமார் எனக்கு போன் செய்து லஞ்ச பணம் குறித்து கேட்டார். அதற்கு நான் ஒப்பந்ததாரர் திரு.பிரதீஸ் அவர்களிடம் கூறி பணத்தை தயார் செய்துவிட்டு நேரில் வந்து பார்க்கிறேன் என்று தெரிவித்தேன். நான் மேற்படி தகவலை திரு.பிரதீஸ் அவர்களிடம் சொல்லிய போது அவர் பணம் எல்லாம் தர முடியாது நீ சென்று லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடு என்று கூறினார். லஞ்சமாக திரு.நிர்மல்குமார் அவர்களுக்கு பணம் ரூ.30,000/- கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை. எனவே லஞ்சமாக பணம் ரூ.30,000/- கேட்கும் குடியாத்தம் BDO அலுவலகத்தில் பணிபுரியும் AE திரு.நிர்மல்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேற்படி 4 ஒப்பந்த பணிகளுக்கு உண்டான வேலை உத்தரவு நகலை இத்துடன் இணைத்துள்ளேன். ஒம்/-XXXXX 07/04/25

Sir,

Today 07.04.2025 at 09.30 hrs Tr.M.Lingeshwaran S/o Mahadevan, Karuneegasamuthiram Village, Valathur Post, Gudiyatham Taluk, Vellore District appeared before me at office of the DSP, V&A.C., Vellore and given a complaint against Tr.Nirmalkumar, Assistant Engineer, BDO Office, Gudiyatham Block, Vellore District for the allegation of demand of undue advantage as bribe from him. Sd/-xxxxxx 07.04.2025

Sir,

After verifying the antecedents of accused and credibility of the complainant and with the concurrence of the DVAC, Chennai, registered a case in Vellore V&AC Cr.No.02/2025, U/s.7 of the PC (Amendment) Act, 2018 on 07.04.2025 at 10.30 Hrs. Sd/-xxxxxx 07.04.2025 Inspector of Police, V&AC, Vellore.

Sir,

The original FIR along with the complainant was sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

7.4.25

Inspector of Police
V&AC, Vellore.